1981 ஆகஸ்ட் 22]

ரூ. 2,000 பெறவில்லை. இரண்டு குடும்பங்கள் மட்டும் இரண்டாவது தவணையாக ரூ. 2,000 பெற்று தொழில் நடத்தி வருகின்றனர்.

பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுபவர் எண்ணிக்கை

*வினா எண். 20—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை பெறும் நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) உதவித்தொகை கோரி 1980–81 ஆம் ஆண்டு வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) பெரியார் மாவட்டத்தில் முதியோர் 3,685 பேரும், விதவைகள் 1,180 பேரும் உடல் ஊனமுற்றவர்கள் 575 நபரும் ஆக மொத்தம் 5,440 நபர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

(ஆ) 1980–81 ஆம் ஆண்டில் முதியோர் ஒய்வூதியம் கேட்டு 7,021 பேரும், விதவைகள் ஒய்வூதியம் கேட்டு 3,074 பேரும், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை கேட்டு 1,066 பேரும், ஆக 11,161 நபர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : இந்த முதியோர் உதவித் தொகை பெறுகிறவர்களை எந்த அடிப்படையில் அரசு தேர்ந்தெடுக்கிறது? அவர்களுக்கு வயது வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : முதியோர் உதவித் தொகை வயது அடிப்படையில் உள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. விதவைகளாக இருந்தால் 40 வயது என்றும் ஊனமுற்றோராக இருந்தால் 45 வயது என்றும் இப்படி வயது வரம்பு அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மாதத்திற்கு ரூ. 25 வாரம் ஒன்றுக்கு ஒரு நபர் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசி, வருடம் இரண்டு முறை சேலை வேட்டி இலவசமாக வழங்கப்பட்டுவருகிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : முதியோர் உதவித் தொகை கொடுக்கப்படுகிற அளவிற்கு இப்போது ஏராளமான பேர்கள் மனு செய்து இருக்கிறார்கள். அவைகளை அரசு பரிசீலனை செய்து உடனடியாகத் தருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

[1981 ஆகஸ்ட் 22

[முற்பகல் 10-20.]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே 1,51,224 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆணை பிறர் பிக்கப்பட்டுள்ளது. இதில் 30-12-1980 முடிய 1,27,210 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 23,614 நபர்களுக்கு உடனடியாக உதவித்தொகை வழங்க எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், வருவாய் நிர்வாகத் துறை ஆணையர்களுக்கும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 17,000 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கவும், 30,000 விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கவும் அனுமதி வழங்கப்படுகிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே 11,000 நபர்கள் 1980-81 ஆம் ஆண்டு முதியோர் உதவித் தொகை கேட்டு, மனு செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவர்களில் எத்தனை பேர்களுக்கு 1980-81-லே உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறும்போது முன்பே கூறியிருக்கிறேன். 1980-81-ல் முதியோர் உதவித் தொகை கேட்டு 7,021 பேர்களும், விதவைகள் ஓய்வூதியம் கேட்டு 3,074 பேர்களும், ஊனமுற்றோர் உதவித் தொகை கேட்டு 1,066 பேர்களும், ஆக மொத்தம் 11,161 பேர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2 தகவல் கோரல்

வெளியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பேசியது குறித்து

திரு. அன்பில் தர்மலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

* * * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.